**இராஜ் ஸ்ரீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் யூனிட் III**

(கோஜென் பிளான்ட்)

நில அளவை எண்:. **50, 59, 60, 61, 62, 109, 110 & 112**

செம்மேடு கிராமம்,

செஞ்சி தாலுகா,

விழுப்புரம் மாவட்டம்.

---

***மணி ஒன்றுக்கு 20.5 மெகா வாட் உற்பத்தி திறனுடன் இயங்கி வரும் மின் ஆலையின் மூலப்பொருள் மாற்றப்படுவதற்க்கான செயலாக்கத்திட்டம்***

# 1. முன்னுரை

**திருவாளர்கள். இராஜ் ஸ்ரீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் யூனிட் III** விழுப்புரம் மாவட்டம் , செஞ்சி தாலுகா, செம்மேடு கிராமத்தில், 20.5 மெகாவாட் திறனுள்ள மின் ஆலை ஒன்றை நிறுவியுள்ளார்கள். இந்நிறுவனமானது கரும்புச்சக்கையை மூலப்பொருளாக பயன்படுத்துவதற்க்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து அனுமதி பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் வளாகத்திலுள்ள சர்க்கரை ஆலையிலிருந்து பெறப்படும் கரும்புச்சக்கை முழுவதும் இம்மின் ஆலைக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

சர்க்கரை ஆலையிலிருந்து பெறப்படும் கரும்புச்சக்கையின் அளவு குறைவாக இருப்பதால், மின் ஆலையின் உற்பத்தி திறன் குறைவாக உள்ளது. எனவே உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காக பாய்லரில் நிலக்கரியையும் கூடுதல் எரிபொருளாக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திருவாளர்கள் இராஜ்ஸ்ரீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிட். நிறுவனமானது சர்வே எண்.50,59—62,109,110&112, செம்மேடு கிராமம், செஞ்சி தாலுகா, விழுப்புரம் மாவட்டத்திலும் விழுப்புரத்திலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்த மின் ஆலையின் மொத்த திட்ட மதிப்பீடு 76 கோடியாகும்.

# 2. நிறுவனம் பற்றிய விபரங்கள்

இந்நிறுவனம் விழுப்புரத்திலிருந்து 45 கி.மீ. தொலைவில், செஞ்சி மற்றும் திருவண்ணாமலை இணைக்கும் சாலையிலிருந்து அருகில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் செஞ்சியிலிருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையில் வடபகுதியில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலையின் அருகாமையில் மக்கள் செறிவுள்ள பகுதி செஞ்சி, மற்றும் இரயில் நிலையம் திருவண்ணாமலை ஆகும்.

**(i) மூலப்பொருட்கள்**

**அனுமதிக்கப்பட்ட அளவு:**

| வ.எண் | மூலப்பொருட்கள் | அளவு (டன் / மாதம்) |
|---|---|---|
| கரும்பு அரவை காலத்தின்பொழுது (240 நாள்கள்) | | |
| 1. | கரும்பு சக்கை | 30,456 |
| கரும்பு அரவையில்லாதபொழுது (60 நாள்கள்) | | |
| 2. | கரும்பு சக்கை | 24,804 |

**விண்ணப்பித்திருக்கும் அளவு:**

| வ.எண் | மூலப்பொருட்கள் | அளவு (டன் / மாதம்) |
|---|---|---|
| கரும்பு அரவை காலத்தின்பொழுது (240 நாள்கள்) | | |
| 1. | கரும்பு சக்கை | 30,456 |
| (அல்லது) | | |
| 2. | நிலக்கரி | 11,520 |
| கரும்பு அரவையில்லாதபொழுது | | |
| 3. | நிலக்கரி | 11,520 |

கரும்பு அரவை காலத்தின்பொழுது கரும்பு ஆலையிலிருந்து பெறப்படும் கரும்பு சக்கை மற்றும் நிலக்கரி எரிபொருளாகப் பயன்படுத்தப்படும். கரும்பு அரவையில்லாத பொழுது நிலக்கரி மட்டும் எரிபொருளாக பயன்படுத்தப்படும்.

## (ii) உற்பத்தி திறன் :

| வ.எண் | உற்பத்திப் பொருள் | அளவு (மெகா வாட்/ மணி) |
|---|---|---|
| 1 | மின் சக்தி | 20.5 மெகா வாட் |

**(iii) செயல்முறை**

கரும்பு சக்கை எரிபொருளாகவும் சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீரை பயன்படுத்தியும் பாய்லரில் 110 கிலோ அழுத்தத்தில் நீராவி உற்பத்தி செய்யப்பட்டு டர்பைனுக்குள் செலுத்தப்படுகிறது. இதிலிருந்து சர்க்கரை உற்பத்திக்கு தேவையான குறைந்த அழுத்த நீராவி பெறப்பட்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்சொன்ன டர்பைனுக்கு செல்லும் வெப்ப சக்தியால் ஜெனரேட்டரிலிருந்துபெறப்படும் மின்சாரம் ஆனது சர்க்கரை ஆலையின் மின் தேவைக்கும் , எஞ்சியுள்ள மின் சக்தியானது மின்சார வாரியத்திற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது.

**(iv) மின் சக்தி மற்றும் எரிபொருள் தேவை**

**(a) கரும்பு அரவை காலத்தின்பொழுது**

இந்தக் காலத்தில் மொத்தம் 20.0 மெகா வாட் மின்சாரம் மட்டும் உற்பத்திசெய்யப்படும். இந்தக்காலத்தின்பொழுது கரும்பாலைக்குத் சராசரியாக 3.85 மெகாவாட் மற்றும் மின் ஆலைக்கு சராசரியாக 2.105 மெகாவாட் மின்சாரம் தேவைப்படும். மீதமுள்ள 14.045 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்பட உள்ளது.

**(b) கரும்பு அரவையில்லாதபொழுது**

இந்தக் காலத்தில் மொத்தம் 20.5 மெகா வாட் மின்சாரம் உற்பத்திசெய்யப்படும். இந்தக்காலத்தின்பொழுது கரும்பாலைக்குத் சராசரியாக 0.2 மெகாவாட் மற்றும் மின் ஆலைக்கு சராசரியாக 1.995 மெகா வாட் மின்சாரம் தேவைப்படும். மீதமுள்ள 18.305 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்பட உள்ளது.

### (v) நீரின் தேவை

இந்நிறுவனத்திற்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவு 925 கிலோ லிட்டர் ஆகும். இந்த தண்ணீர் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு மூலம் பெறப்படுகிறது.

### (vi) நிலம்

இந்த மின்ஆலை சுமார் 19 ஏக்கர் அளவு நிலப்பரப்பை கொண்டிருக்கிறது. இதில் கட்டிடப்பகுதி அமைந்துள்ள இடம் சுமார் 3.5 ஏக்கர் அளவாகும். சுமார் 4.0 ஏக்கர் அளவில் பசுமை வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலங்கள் சாலை வசதிக்கும் தோட்ட உபயோகத்திற்கும் மற்ற பிற உபயோகத்திற்காகவும் பயன்படுத்தப்பட உள்ளது.

### (vii) வேலை வாய்ப்பு

இம்மின் ஆலையில் பணிபுரியும் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

## 3. சுற்றுச் சூழல் நிலவரம்

### (i) தட்ப வெப்பம்

தற்போதைய தட்பவெப்பம் 28.3$^{o}$C லிருந்து 38.3$^{o}$C வரை உள்ளது. தற்போதைய பெய்யும் மழை அளவு வருடத்தில் வடகிழக்குப் பருவக்காற்றில் அதிகமாகவம் தென்மேற்குப் பருவக்காற்றில் குறைவாகவும் உள்ளது.

**(ii) உயிரினச் சுற்றுச் சூழல்**

இந்நிறுவனம் அமைய இருக்கும் பகுதியில் எந்தவித அபாயகரமான தாவர இனமோ அல்லது விலங்கினமோ கிடையாது. மேலும் இப்பகுதில் பாதுகாக்கப்பட்ட இயற்கை சார் உயிரினங்கள் எதுவும் இல்லை.

**(iii) நீர் வளம்**

1. சுற்றுப்புற நீரின் தன்மை

   இங்கு சுற்றுப்புற நீர்நிலைகளை நிர்ணயிப்பது மழைக்காலங்களில் பெய்யும் மழை அளவே ஆகும். இப்பகுதியில் அமைந்துள்ள கிராமங்கள் மழைக்காலங்களில் பெய்யும் மழை நீரை சார்ந்தே உள்ளன.

2. நிலத்தடி நீர்

   இப்பகுதியில் நிலத்தடி நீரின் அளவு 68 மீ லிருந்து 92 மீ வரை வேறுபடுகிறது.

**(iv) நீரின் தரம்**

தொழிற்சாலைப் பகுதியைச் சுற்றிலும் சுமார் 10 கி.மீ வரையிலுள்ள பல்வேறு இடங்களில் நிலத்தடி நீரை எடுத்து பரிசோதித்து நீரின் தாக்கம் பற்றி ஆராயப்பட்டது.

**(v) சுற்றுப்புற காற்று மற்றும் சப்த அளவுகளின் தரம்**

தொழிற்சாலைப் பகுதியைச் சுற்றிலும் சுமார் 10 கி.மீ வரையிலுள்ள பல்வேறு இடங்களில் காற்று மற்றும் சப்த அளவுகளை பரிசோதித்து அவற்றின் தாக்கம் பற்றி ஆராயப்பட்டது. இப்பகுதிகளில் காற்றிலுள்ள துகள்களின் (SPM)-ன் அளவு 95 $\mu g/m^3$ லிருந்து 175 $\mu g/m^3$ வரை வேறுபடுகிறது. சல்பர்—டை—ஆக்சைடு ($SO_2$) மற்றும் நைட்ரஜன் ஆக்சைடுகள் (NOx) ஆகியவற்றின் அளவுகள் மிகவும் குறைவாகவே உள்ளது. சப்த அளவுகள் அதிகபட்சம் 68 dB(A) க்கு குறைவாகவே உள்ளது.

# 4.எதிர்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளும் அதைக்கட்டுப்படுத்தும் முறைகளும்

**(i) வாயு மாசுக்கட்டுப்பாடு**

| வ.எ | பொருள் | கட்டுப்படுத்தும் முறை |
|---|---|---|
| 1 | பாய்லர் (110 TPH) | 90 மீ உயரம் மற்றும 2.7 மீ விட்டம் கொண்ட புகைபோக்கியுடன் கூடிய எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர் என்னும் சாதனம் நிறுவப்பட உள்ளது. |
| 2 | டீசல் ஜெனரேட்டர் (1000 KVA) – 2 nos. | 21 மீ உயரம் கொண்ட புகைபோக்கியுடன் கூடிய சப்த தடுப்புச்சாதனம் பொறுத்தப்பட்ட வெவ்வேறு புகைபோக்கிகள்.. |

**(ii) கழிவு நீர் வெளியேற்றும் மற்றும் சுத்திகரிக்கும் முறை**

இந்நிறுவனத்தில் ஆர்.ஓ.பிளான்டிலிருந்து வெளிவரும் கழிவு நீர் (246.0 கிலோ லிட்டர்) கழிவறை மற்றும் குளியலறைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீர் (19.20 கிலோ லிட்டர்) கூலிங் டவரிலிருந்து வெளிவரும் கழிவு நீர் (25.0 கிலோ லிட்டர்) மற்றும் பாய்லரிலிருந்து வெளிவரும் கழிவு நீர் (139.0 கிலோ லிட்டர்) ஆகியவை இந்த மின்ஆலையின் அருகாமையில் அமைய இருக்கும் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கரும்பு ஆலையில் அமைக்கப்பட்டிருக்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செலுத்தப்படுகிறது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வரவிருக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீர் பசுமை வளர்ப்புத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

**(ii) திடக்கழிவு**

**அ. அனுமதிக்கப்பட்ட அளவு:**

| வ. எண் | திடக்கழிவுகள் | நாள் ஒன்றுக்கு | சுத்திகரிக்கும் முறை |
|---|---|---|---|
| 1 | கரும்பு சக்கையிலிருந்து பெறப்படும் சாம்பல் | 15 டன் | உரமாக உபயோகப்படுத்தப்படுகிறது. |

**ஆ. விண்ணப்பித்திரிக்கும் அளவு:**

| வ. எண் | திடக்கழிவுகள் | நாள் ஒன்றுக்கு | சுத்திகரிக்கும் முறை |
|---|---|---|---|
| 1 | கரும்பு சக்கையிலிருந்து பெறப்படும் சாம்பல் | 15 டன் | உரமாக உபயோகப்படுத்தப்பட உள்ளது |
| 2. | நிலக்கரியிலிருந்து பெறப்படும் சாம்பல் | 48 டன் | செங்கல் உற்பத்தியாளர்களுக்கம், சிமெண்ட் தொழிற்காலைகளுக்கும் விற்கப்படவுள்ளது. |

**(iv) சப்தம்**

இத்தொழிற்சாலையின் உட்புறத்திலும் மற்றும் வெளிப்புறத்திலும் உண்டாகும் சப்தம் மிக குறைந்த அளவே பராமரிக்கப்பட உள்ளது.

# 5. சுற்றுச்சூழல் ஆய்வு

**(i) சுற்றுச் சூழல், பாதுகாப்பு மற்றும் உடல்நல ஆய்வு**

இந்நிறுவனத்தில் திட்டமிடப்பட்டுள்ள சுற்றுச் சூழல், பாதுகாப்பு மற்றும் உடல்நல ஆய்வு பின் வருமாறு.

1. மாதம் தோறும் நடைபெற இருக்கும் புகைபோக்கி பரிசோதனை
2. தினமும் நடைபெற இருக்கும் நீர் மற்றும் கழிவு நீர் பரிசோதனை
3. சுற்றுச் சூழலில் காற்று, சப்தம் ஆகியவற்றின் தரம் பற்றிய ஆய்வு
4. அரையாண்டுக்கு ஒருமுறை நடைபெற இருக்கும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஆண்டுக்கு ஒரு முறை நடைபெற இருக்கும் சமூக நலத்திட்டங்கள்.

***<u>சுற்றுச் சூழல் மேலாண்மை நிதி ஒதுக்கீடு</u>***

| ***துறை*** | ***மூலதன முதலீடு*** | ***வருடாந்திர இயக்கச் செலவு*** |
|---|---|---|
| | ***மொத்தம்*** | |
| | ***(ருபாய் இலட்சத்தில்)*** | |
| காற்று மாசுக்கட்டுப்பாடு | 358.72 | 3.5 |
| நீர் சுத்திகரிப்பு | 72.85 | 0.9 |
| திடக்கழிவு மேலாண்மை | 100 | 1.2 |
| பசுமை வளர்ப்புத்திட்டம் | 2.0 | 1.5 |
| சுற்றுச் சூழல் ஆய்வு | 5.0 | 1.3 |
| **மொத்தம்** | **538.7** | **8.40** |

# 6. நிறுவனம் பற்றிய கூடுதல் ஆய்வு

**(i) நிர்வாக அமைப்பு**

இந்நிறுவனத்தில் தொழிற்சாலையின் அனைத்து செயல்பாடுகளுக்கும் பொது நிர்வாகியின் பொறுப்பில் உள்ளது. இந்தத் தொழிற்சாலையில் நிர்வாகம் பல துறைகளாகப் பிரிக்கப்பட்டு பொறியியல், உற்பத்தி, மனிதவளம், கொள்முதல், சேமிப்பு, கணக்கு, சுற்றுச்சூழல் & பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு என்ற முறையில் செயல்படுகிறது.

**(ii) நிலப்பயன் பாடு**

இப்பகுதி இந்நிறுவனத்தின் சொந்த நிலமாகும். இப்பகுதியில் அடர்ந்த வனம் ஏதும் இல்லை.

**(iii) சமூகப் பொருளாதார நிலை**

இந்நிறுவனம் அமைந்திருக்கும் செம்மேடு கிராமமானது சுமார் 1739 மக்கள் தொகையை கொண்டுள்ளது. இவற்றில் ஆண்கள் 940 மற்றும் பெண்கள் 799 ஆகும். இது 2001 ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் பெற்றபட்டது. இப்பகுதியில் உள்ள மக்களின் முக்கிய வருவாய் விவசாயம் மூலமே பெறப்படுகிறது.

**(iv) பசுமை வளர்ப்புத் திட்டம்**

இந்நிறுவன வளாகத்தில் சுமார் 4 ஏக்கர் அளவு பசுமை வளர்ப்புத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மரங்களின் இடையில் சுமார் 5 மீ அளவு இடைவெளி விடப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனம் இதனைச் சுற்றியுள்ள இடங்களில் பசுமை வளர்ப்புத்திட்டத்தை செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

## 7. நிறுவனத்தின் நன்மைகள்

- கிராமப்புற பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகிறது
- நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுகிறது.

## 8. சுற்றுச் சூழல் மேலாண்மை திட்டம்

### (i) காற்றின் தரம்

இந்நிறுவனத்தில் உபயோகிக்க இருக்கும் பாய்லரிலிருந்து வெளியேறும் தூசுக்களைக் கட்டுப்படுத்த புகைபோக்கியுடன் கூடிய எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர் என்னும் சாதனம் நிறுவப்பட உள்ளது. இந்த புகைபோக்கி பாய்லரிலிருந்து வெளிவரும் வாயுவின் அளவை கருத்தில்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

டீசல் ஜெனரேட்டர்களிலிருந்து வெளிவரும் மாசு தகுந்த உயரமுள்ள புகைபோக்கியின் உதவியுடன் வெளியேற்றப்படுகிறது.

### (ii) நீர் வளம்

இந்நிறுவனத்திற்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவு 925 கிலோ லிட்டர் ஆகும். இந்த தண்ணீர் தொழிற்சாலையின் வளாகத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் மூலமாக பெறப்படுகிறது. **தி/ள்.இராஜ் ஸ்ரீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் யூனிட் III** நீரின் மூலம் குளிர்விக்கும் சாதனத்திற்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்குத் தகுந்த காற்று மூலம் குளிர்விக்கும் சாதனத்தை மிகுந்த பொருட்செலவில் நிறுவியுள்ளார்கள். இந்த காற்று மூலம் குளிர்விக்கும் சாதனத்தை உபயோகிப்பதால் தண்ணீரின் தேவை மற்றும் கழிவு நீர் ஆகியவை முற்றிலும் தவிர்க்கப்படுகிறது. நிறுவனத்தின் இந்த நடவடிக்கை சுற்றுப்புறச் சூழலுக்குச் சாதகமான ஒரு அம்சமாகும்.

**(iii) நீரின் தரம்**

இந்நிறுவனத்தில் ஆர்.ஓ. பிளான்டிலிருந்து வெளிவரும் கழிவு நீர் (246.0 கிலோ லிட்டர்) கழிவறை மற்றும் குளியலறைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீர் (19.20 கிலோ லிட்டர்) கூலிங் டவரிலிருந்து வெளிவரும் கழிவு நீர் (25.0 கிலோ லிட்டர்) மற்றும் பாய்லரிலிருந்து வெளிவரும் கழிவு நீர் (139.0 கிலோ லிட்டர்) ஆகியவை இந்த மின்ஆலையின் அருகாமையில் அமைய இருக்கும் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கரும்பு ஆலையில் அமைக்கப்பட இருக்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செலுத்தப்படுகிறது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வரவிருக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீர் பசுமை வளர்ப்புத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

**(iii) திடக்கழிவு**

**அ. அனுமதிக்கப்பட்ட அளவு:**

| வ.எண் | **திடக்கழிவுகள்** | **நாள் ஒன்றுக்கு** | **சுத்திகரிக்கும் முறை** |
|---|---|---|---|
| 1 | கரும்பு சக்கையிலிருந்து பெறப்படும் சாம்பல் | 15 டன் | உரமாக உபயோகப்படுத்தப்படுகிறது. |

ஆ. விண்ணப்பித்திருக்கும் அளவு:

| வ.எண் | **திடக்கழிவுகள்** | **நாள் ஒன்றுக்கு** | **சுத்திகரிக்கும் முறை** |
|---|---|---|---|
| 1 | கரும்பு சக்கையிலிருந்து பெறப்படும் சாம்பல் | 15 டன் | உரமாக உபயோகப்படுத்தப்பட உள்ளது |
| 2. | நிலக்கரியிலிருந்து பெறப்படும் சாம்பல் | 48 டன் | செங்கல் உற்பத்தியாளர்களுக்கம், சிமெண்ட் தொழிற்காலைகளுக்கும் விற்க்கப்படவுள்ளது. |

**(iv) சப்தம்**

இத்தொழிற்சாலையின் உட்புறத்திலும் மற்றும் வெளிப்புறத்திலும் உண்டாகும் சப்தம் மிக குறைந்த அளவே பராமரிக்கப்பட்டு வருகிறது.

**(v) நிலப்பாதுகாப்பு**

இங்கு வெளியேற்றப்படும் கழிவு நீரின் அளவு மிகமிகக் குறைவாகவே இருக்கும் ஆதலால் மண்ணின் தரம் பாதுகாக்கப்படும். திடநிலையிலான கழிவு மிகக் குறைவாகவே இருக்கும். மேலும் இந்நிறுவனத்தின் வெற்றிடங்களில் பசுமை வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த உள்ளதால் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுகிறது.

**(vi) சப்த அளவு**

இப்பகுதியில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரப்படி சப்த அளவுகள் மிகவும் குறைவான அளவாகவே உள்ளது கண்டறிப்பட்டுள்ளது.

**(vii) சமூகப் பொருளாதார ஆய்வு**

இந்நிறுவனத்தினால் மக்கள் இடம்பெயர்தலுக்கான வாய்ப்புக்கள் இல்லை. இந்நிறுவனத்தினால் சுற்றியுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனம் சுற்றியுள்ள கிராமங்களுக்கு சமூக நலன்கள், உடல் நலம், கல்வி மற்றும் பிற வசதிகளை செய்து வருகிறது.

**இராஜ் ஶ்ரீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் யூனிட் III**

**தலைவர்**